# தனித்து ஒளிரும் நட்சத்திரம் - கலைஞர் ! 4

**தி**ருக்குறளுக்கு உரை எழுதுவதும் ஒன்றுதான்' என்று எழுதுகிறார். அதோடு திருக்குறளுக்கு உரை எழுதுவோர் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் என்ன என்பதையும் எழுதியிருக்கிறார். ஐந்து நெறிமுறைகளை அவர் வகுத்தும் தந்திருக்கிறார். அதோடு தான் திருக்குறளுக்கு எந்த நெறிமுறையில் உரை எழுதியிருக்கிறேன் என்பதையும் தெளிவாக்கி இருக்கிறார்.

'கடவுள் வாழ்த்து' எனும் அதிகாரத் தலைப்பை 'வழிபாடு' எனக் குறித்துள்ளேன். 'வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் எனும் வாதத்திற்குள் சிக்க வைக்க நான் விரும்பவில்லை. வழிபாடு எனும் அதிகாரத்தில் அமைந்துள்ள குறட்பாக்களுக்கு நான் எழுதியுள்ள உரைகளைக் கொண்டு இதனை உணரலாம்' என்று முன்னுரையில் குறிப்பிடுகிறார். அதாவது திருக்குறளுக்கு இந்த அளவீடுகளின் அடிப்படையில்தான் நான் உரை எழுதியிருக்கிறேன் என்பதைத் தெளிவுப்படுத்துகிறார்.

உலகம் தோன்றி, மனித இனம் தோன்றி, எழுத்து வடிவம் தோன்றி, புத்தகங்களை அச்சிட்ட பிறகு, எத்தனையோ கோடிக்கணக்கில் புத்தகங்கள் அச்சிடப்பட்டு இருந்தாலும் அதில் கலைஞருக்குப் பிடித்தது திருக்குறள்தான். அப்படிப்பட்ட புத்தகத்திற்கு உரை எழுதும்போதுகூட நான் பகுத்தறிவுவாதியாகவே இருப்பேன், என்னுடைய கொள்கையிலிருந்து மாற மாட்டேன், குறள் குறிப்பிடுகிற ஒருசில சொற்களோடு நான் உடன்படவில்லை, அதனால் நான் மாற்றுச் சொல்லை, மாற்றுப் பொருளைத் தருகிறேன் என்று துணிவுடன் எழுதிக் காட்டியிருக்கிறார். இப்படி ஒரு வெறிகொண்ட கொள்கை பற்றாளரைப் பார்ப்பது அரிதினும் அரிது. இத்தகைய துணிச்சலும், தன் கொள்கையில் சமரசம் செய்துகொள்ளாத, கொள்கை பற்றும்தான் அவரை லட்சிய வாதியாக மாற்றியிருக்கிறது.

குறள் 72இல் இடம்பெற்றிருக்கிற 'எழு பிறப்பு' என்ற சொல்லுக்கு கலைஞர் தன்னுடைய உரையில் 'ஏழேழு தலைமுறை' என்று எழுதியிருக்கிறார். அதே மாதிரி 84ஆவது குறளில் வரும் 'செய்யாள்' என்ற சொல்லுக்கு 'செல்வம் எனும் திருமகன்' என்றும், குறள் 86இல் இடம்பெற்றிருக்கிற, 'வானத்தவர்' என்பதற்கு 'புகழ் வானில் இருப்போர்' என்றும், குரல் 371இல் இடம்பெற்றிருக்கிற, 'ஊழ்' என்ற சொல்லுக்கு 'இயற்கை நிலை' என்றும், குறள் 565இல் இடம்பெற்றிருக்கும் ' பே யெ' எனும் சொல்லுக்கு 'பேய்த் தோற்றம்' அல்லது 'அச்சம் தரும் தோற்றம்' என்றும், குறள் 102இல் இடம்பெறும் 'தெய்வம்' என்று சொல்லுக்கு 'இயற்கை நிலை' என்றும் எழுதியிருக்கிறார்.

'பேய்த் தோற்றம்', 'தெய்வம்' என்று எழுதிவிட்டால் தன்னுடைய கொள்கையின் நிலை மாறிவிடுமே என்று 'அச்சம் தரும் தோற்றம்', 'இயற்கை நிலை' என்றும் எழுதியிருப்பதைப் படித்தபோது, 'இப்படியும் ஒருவரால் சிந்திக்க முடியுமா?' என்ற வியப்புதான் ஏற்பட்டது. திருக்குறளில் தனக்கு, தன் கொள்கைக்கு உடன்படாமல் வரும் சொற்களுக்கு கலைஞர் எழுதியிருக்கிற சொற்களைக் குறித்து ஒரு ஆய்வுசெய்யும் அளவுக்கு இருக்கின்றன. திருக்குறள் உரையைப் படிக்கப்படிக்க, புதியபுதிய சொற்களுடன், புதியபுதிய வாக்கியங்களும் கிடைக்கப்பெறும். கவனமாகவும், எச்சரிக்கையுடனும் தன்னுடைய உரையை எழுதியிருக்கிறார்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் - அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (குறள் 2) என்ற குறளுக்கு கலைஞர் எழுதிய உரை இது: 'அன்பு இல்லாதவர் எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர். அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி அனைத்தும் பிறர்க்கென எண்ணிடுவர்."

கலைஞருடைய திருக்குறள் உரை என்பது மிகவும் தெளிவானது. ஒரு விதத்தில் எளிமையானது. பிற உரையாசிரியர்களின் சாயல் இல்லாதது. திருக்குறளைப் படித்து அதன் பொருளை மிக எளிமையாகப் புரிந்துகொள்ள கலைஞரின் விளக்க உரை நிச்சயம் உதவும். திருக்குறளோடு நெருக்கமாக முடியும்.

**சங்கத்தமிழ்**

கலைஞர் சங்ககால இலக்கியங்களை எவ்வளவு ஆழமாகப் படித்திருக்கிறார், புரிந்துகொண்டிருக்கிறார், அவற்றின் பெருமைகளை உணர்ந்திருக்கிறார் என்பதற்குச் சான்றாக இருக்கிறது சங்கத்தமிழ் நூல். சங்க கால இலக்கியங்களை இன்றைக்கு இருக்கக்கூடியவர்களுக்கு விரிவாக அறிமுகப்படுத்த வேண்டும், அவற்றின் மீது ஆர்வத்தைத் தூண்ட வேண்டும், அவற்றின் மதிப்பை உணர வைக்க வேண்டும் என்ற பெரும் விருப்பத்தின் காரணமாகத்தான் சங்கத்தமிழ் எழுதியிருக்கிறார். எழுதுவது மட்டும் இலக்கியப் பணி அல்ல, படிக்க வைப்பதும் இலக்கியப் பணிதான்.

சங்கப் பாடல்களில் தனக்குப் பிடித்தமான 100 பாடல்களைத் தேர்ந்தெடுத்து, அப்பாடல்களுக்கு விளக்கவுரைபோல் எழுதாமல் பாடல்களை மூலமாகக் கொண்டு தன்னுடைய நடையில் மறுஉருவாக்கம் செய்திருக்கிறார், அதுவும் கவிதை வடிவில். மூலப்பாடல்கள் எந்த அளவிற்குப் பெருமை வாய்ந்ததாக இருக்கிறதோ, அதே அளவிற்கு கலைஞர் மறுஉருவாக்கம் செய்திருக்கிற கவிதைகளும் மதிப்பு வாய்ந்தவையாகவே இருக்கின்றன.

சங்கப் பாடல்களில் 100 பாடல்களைத் தேர்ந்தெடுத்திருந்தாலும் ஔவையார் எழுதியிருக்கிற (புறம் - 286) பாடல், பொன்முடியாரின் (புறம் - 310) பாடல், காக்கைப் பாடினியாரின் (புறம் - 278) பாடல், வெள்ளைமாறனாரின் (புறம் - 296) பாடல், பூங்கணுத்திரையாரின் (புறம் - 277) பாடல், ஒக்கூர் மாசாத்தியாரின் (புறம் - 279) பாடல் போன்றவை கலைஞரின் கவனத்தை அதிகம் ஈர்த்திருக்கின்றன.



பொதுவாக அகப்பாடல்களுக்கும் புறப்பாடல்களுக்கும் தலைப்புகள் இருக்காது. ஆனால் கலைஞர் எழுதிய சங்கத்தமிழில், ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு தலைப்பைக் கொடுத்திருக்கிறார். அந்தத் தலைப்பு மூலப்பாடலின் மையக் கருத்தையும், தன் கவிதையின் மையக் கருத்தையும் வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்ற வகையில் அமைத்திருக்கிறார். ஔவையார் எழுதிய பாடலுக்கு (புறம் 286) 'சுமந்தவள் சுமந்த சோகம்' என்றும், பொன்முடியார் எழுதிய பாடலுக்கு (புறம் 310) 'ஒரு தாயின் தாலாட்டு' என்றும், காக்கைப்பாடினியார் எழுதிய பாடலுக்கு (புறம் 278) 'வாளிங்கே அவன் நாக்கெங்கே' என்றும், ஒக்கூர் மாசாத்தியார் எழுதிய பாடலுக்கு (புறம் 279) 'சென்று வா மகனே செருமுனை' என்றும், வெள்ளை மாறனார் எழுதிய பாடலுக்கு (புறம் 296) 'இருவிழி மழையும், இதய மகிழ்வும்' என்று தலைப்பிட்டிருக்கிறார். தலைப்புகள் மிகவும் பொருத்தமாக இருக்கின்றன.

கலைஞர் தான் தேர்ந்தெடுத்த 100 சங்கப் பாடல்களில் மூதின் மகளிர்(வீர மகளிர்) சார்ந்த பாடல்களுக்குக் கூடுதல் முன்னுரிமை தந்திருக்கிறார். மூதின் மகளிர் அற ஒழுக்கம் மிக்கவர்களாக, மறப்பண்பு, தன்மானம், சுயமரியாதை, நாட்டுப் பற்று, அரசப் பற்று, மொழிப் பற்று, இனப் பற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அகவாழ்விலும் புறவாழ்விலும் வீரத்தையே கொண்டாடுகிறவர்களாக இருக்கின்றனர். தந்தையை, கணவனை, மகனை, சிறுவன் என்று கூடப் பார்க்காமல் போருக்கு விருப்பத்தோடு அனுப்புகிற பெண்களாக இருக்கின்றனர். கணவன், மகன் போரில் வெற்றிப் பெறாவிட்டாலும், முதுகில் ஈட்டியால் குத்துப்பட்டு இறக்கக் கூடாது, மார்பிலே குத்துப்பட்டு இறக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அப்படி மரணிப்பதையே குலப் பெருமையாகக் கருதுகின்றனர்.



எழுத்தாளர் **இமையம்**

"இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி - இதைக் கண்டாள், இதயங் குளிர்ந்தாள் - 'எதைக் கண்டாலும் இனிக் கவலை இல்லை. என் மகன் வீரனாய் இறந்தான்'" என்று கலைஞர் எழுதியிருக்கிறார். கோழையாகச் சாக விரும்பாத மூதின் மகளிர். கலைஞரின் நெஞ்சத்தில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளனர்.

1996இல்தான் கலைஞர் சங்கத்தமிழ் எழுதுகிறார். ஆனால் அதற்கு முன்பாக 1945இல் புறநானூற்றுத் தாய் ஒன்று என்ற கவிதையை காக்கைபாடினியாரின் பாடலை (278) அடிப்படையாகக் கொண்டு எழுதியிருக்கிறார். அதே மாதிரி புறநானூற்றுத் தாய் இரண்டு என்ற கவிதையை 1955இல் ஒக்கூர் மாசாத்தியார் எழுதிய பாடலை (279) அடிப்படையாகக் கொண்டு எழுதியிருக்கிறார். 1964இல் ஔவையார் எழுதிய (286) பாடலை அடிப்படையாகக் கொண்டு புறநானூற்றுத் தாய் மூன்று என்ற கவிதையை எழுதியிருக்கிறார். இந்த மூன்று நீள் கவிதைகளும் அவருடைய கவிதைத் தொகுப்பிலும் இடம்பெற்றிருக்கின்றன. இந்தக் கவிதைகள்தான் பின்னாளில் சங்கத்தமிழ் எழுதுவதற்கு அவருக்குத் தூண்டுதலாக இருந்திருக்க வேண்டும்.

புறநானூற்றுத் தாய் ஒன்று என்ற கவிதையை கலைஞர் கவியரங்க மேடையில் பாடியிருக்கிறார். பெரும் புகழைப் பெற்றுத் தந்த கவிதை. 1945இல் எழுதியிருந்தாலும் இன்று படிக்கும்போதுகூட உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய கவிதையாக இருக்கிறது. 1945, 1955, 1964இல் எழுதிய கவிதைகள் இன்றும் உயிரோடிருக்கிறது. கலைஞருடைய தமிழ் என்றும் வாழும் என்பதற்கு இந்தக் கவிதைகளே சாட்சியாக இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்று:

**"பகைவர் வேலுக்கு வழிசொல்ல**
**வகையற்ற கோழையே**
**என் வீரப்பாலுக்கு வழி சொல்வாய்."**

புறநானூற்றுத் தாய் 1, 2, 3 ஆகிய கவிதைகளில், தமிழ் மொழியின் அழகைப் பலவிதமாகச் சொல்கிறார். புறநானூற்றுத் தாய் 1 கவிதையில் 'கிழட்டுத் தமிழச்சி'. 'பழந்தமிழ் குடியினிலே', ' 'செந்தமிழ் காளைகள்' என்றும் புறநானூற்றுத் தாய் கவிதை 2இல் 'காவிரி தந்த தமிழகத்து புது மணலில், தமிழகத்து கிளியொருத்தி', 'அச்சடித்த தமிழ்ப் பதுமை', 'நந்தமிழ் நாடு', 'பண்பட்ட தமிழ் மருந்தாய்' என்று எழுதியிருக்கிறார். புறநானூற்றுத் தாய் 3இல் 'வீரம் காட்டுதலே தமிழர் மரபு', 'தனித்தமிழ்ச் சொல் உதிர்க்கும் புலமை மிக்காள்', 'காவலர்கள் வாழ்ந்திருந்த தமிழ்நாடு', 'நிலம் வகுத்து வாழ்கின்ற தமிழரிடையே! சோலை பூவினம் போல் தமிழ்க் கவிதை மலர வைத்தாள்', ' நாமணக்கும் தமிழ் மணம்', 'தமிழ்த் தாயே' என்று கவிதையில் பல இடங்களில் எழுதியிருக்கிறார். இந்த வார்த்தைகளும், வாக்கியங்களும் கலைஞரின் தமிழ்ப் பற்றை, தமிழ்நாட்டின் பற்றைக் காட்டுகின்றது. 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற அவருடைய முழக்கம் சங்கத் தமிழிலும் எதிரொலிக்கின்றது.

சங்கத்தமிழ் நூலில் இடம்பெற்றுள்ள 484 கவிதைகளிலும் சங்ககால வாழ்க்கை கண்முன் காட்சிகளாக உருப்பெற்று நிற்கின்றன. சங்கத்தமிழ் நூலைப் படிக்கும்போது, கலைஞரின் மீது மட்டுமல்ல சங்கப் பாடல்கள் மீதும் மதிப்புக் கூடுவதை, அவற்றைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் கூடுவதைத் தவிர்க்க முடியாது. இந்த இரண்டு உணர்வுகளையும் தூண்டிவிட்ட விதத்தில் கலைஞரின் சங்கத்தமிழ் வெற்றிப் பெற்றிருக்கிறது.

கலைஞரின் கவித்துவ எழுத்துநடைக்கு, மொழி, அழகுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆள்அன்று என்று வாளின் தப்பார்;**
**தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய**
**கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்**
**மதுகை இன்றி, வயிற்றுத் தீத்தணியத்**
**தாம்இரந்து உண்ணும் அளவை**
**ஈன்மரோ இவ்வுலகத் தானே!"** - இது சங்கத்தமிழ்ப் பாடல் (74).

அந்தப் பாடலுக்கு கலைஞர் எழுதியிருக்கிற கவிதை இது:

**"பிள்ளையொன்று இறந்து பிறப்பினும் சதைப்**
**பிண்டமொன்று பிறந்து தொலைக்கினும்**
**மூப்புக் கொண்டு மடிந்திடினும்**
**முடிவிலொரு நோய்கண்டு முடிந்திடினும்**
**போரில் கலந்து விழுப்புண்பெற்று -**
**மானமிகு வீரரென மாண்டிடாத பழி**
**துடைப்பதற்காக,**
**வாள் கொண்டு உடலில் கீறி**
**வான்புகழ் வாழ்வில் சேர்த்த பின்பே**
**உடலடக்கம் செய்திடும் மானமரபே**
**அடலேறுகள் மலிந்திடும் தமிழர்மரபு!**
அந்தப்
பண்பாட்டு மரபுவழி வந்துதித்த நானோ - மனப்
புண்பட்டு, பகையரசின் சிறைப்பட்டு நாய்போல
தண்ணீர்க்கும் காத்திருக்கலானேன் இனி
உண்ணீர் என்று பன்னீர் தந்து உபசரித்தபோதும்
தகுதியன்று இனி உயிர் வாழ்தல் அதனாலே
தமிழ்த்தாயே! என் மானங் காக்க
உன்மடிதனிலே விழுகின்றேன், தாங்கிக்கொள்க!"

நெஞ்சுக்கு நீதி

கலைஞர் எழுதிய தன்வரலாற்றுக் கதையான 'நெஞ்சுக்கு நீதி' 1929 முதல் 1969 ஆண்டு வரையிலான அவருடைய வாழ்க்கை நிகழ்வுகள் முதல் பாகமாகவும், 1969 முதல் 1976 வரையிலான வாழ்க்கை நிகழ்வுகள் இரண்டாம் பாகமாகவும், 1976 முதல் 1988 வரையிலான வாழ்க்கை நிகழ்வுகள் மூன்றாம் பாகமாகவும், 1989 முதல் 1996 வரையிலான வாழ்க்கை நிகழ்வுகள் நான்காம் பாகமாகவும், 1996 முதல் 1999 வரையிலான வாழ்க்கை நிகழ்வுகள் ஐந்தாம் பாகமாகவும், 1999 முதல் 2006 வரையிலான வாழ்க்கை நிகழ்வுகள் ஆறாம் பாகமாகவும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

கலைஞரின், 'நெஞ்சுக்கு நீதி' அளவிற்குத் தன்வரலாற்றுக் கதையை வேறு யாரும் எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. எழுதியிருந்தாலும் அது ஒரு தனிமனிதனுடைய வாழ்க்கைக் கதையாக, ஒரு குடும்பத்தின் கதையாகவே இருந்திருக்கும். உலகெங்கும் எழுதப்பட்டிருக்கும் பல தன்வரலாற்றுக் கதைகள் தனிமனித கதையாகவும், குடும்பத்தின் கதையாகவும் மட்டுமே எழுதப்பட்டிருக்கின்றன. ஒரு காலத்தின் கதையாக, சமூகத்தின் கதையாக, ஒரு கட்சியின் கதையாக, கட்சி மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகளின் கதையாக இருந்திருக்காது.

கலைஞர் எழுதிய தன்வரலாற்றுக் கதைக்கு 'நெஞ்சுக்கு நீதி' என்று பெயருக்குப் பதிலாக, 'என்னுடைய அரசியல் வழ்க்கை' அல்லது 'தி.மு.க.வின் வரலாறு' என்று பெயர் வைத்திருந்தால் இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும். காரணம், அதில் அவருடைய அரசியல் செயல் சார்ந்த தகவல்கள்தான் பெருமளவில் சொல்லப்பட்டிருக்கின்றன. கலைஞருடைய வாழ்வு என்பது அரசியல் செயல்பாடுகள், போராட்டங்கள் தானே! இந்தியாவின், தமிழ்நாட்டின் கடந்த ஒரு நூற்றாண்டுகால சமூக, அரசியல் சூழ்நிலைகளை அறிந்து கொள்ள நெஞ்சுக்கு நீதி நிச்சயம் ஒரு சிறந்த ஆவணமாக இருக்கும். 'நெஞ்சுக்கு நீதி என் வாழ்க்கை கதை என்று கூறப்பட்டாலும் எனக்கென்று ஒரு தனி வாழ்க்கை கிடையாது. ஒரு லட்சியத்தை மையமாகக் கொண்டு சுழலும் இயக்கத்தின் வரலாற்றில் நான் ஒரு பகுதி' என்று முன்னுரையில் எழுதியிருக்கிறார்.

கடந்த நூற்றாண்டில் தமிழ்நாட்டில், இந்தியாவில் இருந்த அரசியல் கட்சிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், அவர்களுடைய நடவடிக்கைகள், குறிப்பாகத் தமிழ்நாட்டில் நடந்த முக்கிய அரசியல் மாற்றங்கள், நிகழ்வுகள் பற்றி அறிந்துகொள்வதற்கு இந்த நூல் பெரிதும் உதவும். 'நெஞ்சுக்கு நீதி', கற்பனை அல்ல, இரக்கத்தைக் கோரும் கண்ணீரல்ல, புலம்பல்கள் அல்ல. அவர் வாழ்ந்த காலத்தில் தமிழ்நாட்டில், இந்தியாவில் அரசியல் களத்தில் என்ன நடந்ததோ அதை நடந்த விதமாகவே எழுதியிருக்கிறார். சிறுசிறு நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் நினைத்ததும், அவற்றை ஆவணப்படுத்தியதும் முக்கியமானது. இதன் மூலம் கலைஞருக்குள் ஒரு வரலாற்று ஆசிரியன் இருந்திருக்கிறான் என்பது தெரிகிறது. ஒரு சமூகம் தனக்கான வரலாற்றை இப்படித்தான் எழுதிக்கொள்கிறது.

நெஞ்சுக்கு நீதியில் தன்னைப் பற்றி, தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி, குடும்பத்தைப் பற்றி எழுதாமல், "ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பெரியாரின் அறிவியக்கக் கருத்துகளை அடித்தளமாகக் கொண்டு, அண்ணாவின் வழிமுறைகளால் அழுத்தமான கட்டடமாக உருவாக்கியுள்ள தி.மு.கழகம் எனும் இந்த இலட்சியப் பாசறை சோதனைகள், வேதனைகள், சூழ்ச்சிகள் ஆகியவற்றுக்கிடையே அசையாத இமயமாகவே எழுந்து நின்று கொள்கை முரசம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆயிரம் காலத்துப் பயிராக இந்தக் கழகத்தைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும் என்பதே, எனக்கு என்றுமே தனியாத ஆசை" என்று பாகம் இரண்டில் எழுதியிருக்கிறார்.

மிசா கைது நடவடிக்கையின் போது தானும் தன்னுடைய கட்சிக்காரர்களும் எப்படி இருந்தோம் என்பதை விளக்குவதற்காக எழுதியது:

**"சாகிற வரையில் சிறை" என்றனர்.**

**"என் சாம்பல் தமிழ் மணந்து வேகும்" என்றாய்.**

**"கட்சியைத் துறந்திடு. கதவு திறந்திடும்" என்றனர்.**

**"கட்சியைக் கட்டிடு நடையைத் தொடங்கிடு" என்று நறுக்கென்று பதில் அளித்தாய்.**

**"தலைமைத் தாங்கி ஓர் அறிக்கை அளித்திடு"** என்றனர்.

"தலைகள் அறுபடும். தப்பிடலாம்" என்றனர்.

"அதற்கு நம்முடன் பல எட்டப்பர்கள் வந்துள்ளனர். அவர்களை அணுகிடு" என்றனர்.

"தலையே அறுபடினும் துரோகம் செய்யும் ரத்தம் இந்த ரத்தமல்ல என நிமிர்ந்து விடையளித்தாய்" என்று எழுதியிருக்கிறார்.

நெஞ்சுக்கு நீதியில் சொல்லப்பட்டுள்ள தகவல்கள், நிகழ்ச்சிகள், சம்பவங்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு விதத்தில் முக்கியமானவை. இந்தியாவில் இருந்த சமூகப் போராளிகள், அரசியல் கட்சித் தலைவர்கள் இறந்த போதெல்லாம் கலைஞர் தன்னுடைய அஞ்சலியாக இரங்கற்பா எழுதியிருக்கிறார். தமிழ்நாட்டிலிருந்த சமூகப் போராளிகள், அரசியல் கட்சித் தலைவர்கள் இறந்த போதும் இரங்கற்பா எழுதியிருக்கிறார். தன்னுடைய அரசியலுக்கு, கொள்கைக்கு எதிரிகளாக இருந்த பெருதலைவர்களுக்கும் புகழ் அஞ்சலி செலுத்தும் விதமாக இரங்கற்பா எழுதியிருக்கிறார். இச்செயல் கலைஞரின் கண்ணியத்தை, பெருந்தன்மையை, அரசியல் நாகரிகத்தையே காட்டுகிறது.

'நெஞ்சுக்கு நீதி'யைப் படிக்கப்படிக்க இது கலைஞருடைய கதை அல்ல. தி.மு. கழகத்தின் வரலாறு என்பதற்கு 1970இல் திருச்சியில் நடைபெற்ற இரண்டு நாள் மாநாட்டில் கலைஞர் கொண்டுவந்த ஐந்து தீர்மானங்கள் பற்றி எழுதியிருப்பதுதான்.

"அண்ணா வழியில் அயராது உழைப்போம். ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம். இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம். வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம். மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்பதுதான். இந்தக் கொள்கை முழக்கம்தான் 'நெஞ்சுக்கு நீதி' நூலில் நிறைந்து கிடக்கின்றன. என்ன ஆச்சரியம், தன்வரலாற்று நூலில் கட்சியின் கொள்கை முழக்கம், கட்சியின் கொள்கை விளக்கம்.

முதன்முதலாக வெற்றி பெற்று எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த சமயத்தில், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் சட்டமன்றத்தில் ஒரு விவாதத்தின்போது, 'சட்டமன்ற விவாதங்களில் வெப்பம் இருப்பதைக் காட்டிலும், ஒளி இருப்பதே வரவேற்கத்தக்கதாகும். வெப்பம் வெறுப்புணர்வுக்கு வித்திடும். ஒளி விளக்கத்திற்கு வழிவகுத்திடும்' என்று பேசியது 'நெஞ்சுக்கு நீதி'யில் இடம்பெற்றிருக்கிறது. இப்படி நூற்றுக்கணக்கான செய்திகள், சம்பவங்கள், வரலாற்று நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த நூல், கடந்த நூற்றாண்டின் தமிழ்ச் சமூக அரசியலை அறிவதற்குச் சிறந்த ஆவணம்.

'நெஞ்சுக்கு நீதி' என்பது தனக்குத் தானே உண்மையாக, நேர்மையாக இருப்பது. பெரியாருக்கு, அண்ணாவுக்கு, தி.மு.கழகத்திற்கு, கட்சிக்காரர்களுக்கு, சமூகத்திற்குகலைஞர்எவ்வளவுநேர்மையாக,உண்மையாக இருந்தார் என்பதை அறிவதற்கு 'நெஞ்சுக்கு நீதி'யைப் படிக்க வேண்டும். இது ஒரு காலத்தின் வரலாறு, சமூகத்தின் வரலாறு. பொதுவாகத் தன்வரலாற்றுக் கதை நூலை எழுதும்போது, "என் வாழ்க்கை பயணம்", "என் வாழ்க்கை கதை", "நான் கடந்து வந்த பாதை" என்றுதான் தலைப்பு வைப்பார்கள். ஆனால், தன் வரலாற்றுக் கதைக்கு 'நெஞ்சுக்கு நீதி" என்றுதான் தலைப்பு வைத்திருக்கிறார். இதுதான் கலைஞரின் தனித்துவம்.

**கடிதம்**

1968 முதல் 2016 வரையிலான காலத்தில் கலைஞர் எழுதிய கடிதங்களின் எண்ணிக்கை 4,041. மொத்த பக்கங்களின் எண்ணிக்கை 21,510. மொத்த கடிதங்களையும் தொகுத்து 54 தொகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

.... தொடரு ம்...